*3*

# நமது தகுதி தேவனிடமிருந்து வருகிறது

## (2 கொரிந்தியர் 3:4–4:6)

*“நாங்கள் இப்படிப்பட்ட நம்பிக்கையை உடையவர்களாதலால், மிகவும் தாராளமாய்ப் பேசுகிறோம்” (3:12).*

வேட்பாளர்கள் பொதுப் பதவிக்காகப் போட்டியிடுகையில், நாட்டின் மிகத்தீவிரமான பிரச்சனைகளை எதிர்கொள்வதில் அவர்கள் காட்சிப்படுத்தும் முற்றான தன்னம்பிக்கை குறித்து நான் அடிக்கடி திகைப்பு அடைந்திருக்கிறேன். இருப்பினும் எந்த ஒரு வேட்பாளரும் இந்தப்பிரச்சனைகளை சந்திப்பதில் தனது திறமை பற்றித் தன்னம்பிக்கையைக் காட்சிப்படுத்தாதிருந்தால், வாக்காளர்களின் நம்பிக்கையை அவர் ஆதாயப்படுத்த இயலாது. ஆகவே அவர், பணவீக்கம், வேலையின்மை முதலிய அறைகூவல்களை அவரால் சந்திக்க முடியும் என்று முரட்டுத்தனமான ஒலித்தல் இன்றி, நமக்குக் கூறும்படி எதிர்பார்க்கப்படுகின்றார். பிரச்சனைகள் என்பவை மனிதரின் முயற்சிக்கு அப்பாற்பட்டவை என்று தீவிரமான சிந்தனையாளர்கள் பலர் நமக்குக் கூறலாம், ஆனால் அறைகூவல் எதுவாக இருந்தாலும், அதைச் சந்திக்கத் தாம் திறன் கொண்டுள்ளதாக வேட்பாளர் நமக்குக் காட்சிப்படுத்துகிறார்.

எந்தப் பணியும் மிகப்பெரியதல்ல என்று தைரியமாய்க் கூறுகிற நம்பிக்கையின் ஆவியைப் பாராட்டுகிற மக்களாக நாம் இருக்கிறோம். நம்மில் பலர், நமது நம்பிக்கையைக் கட்டியெழுப்பும்படி வடிவமைக்கப்பட்டுள்ள சுய உதவிப் பாடங்களை, ஊடகத்தின் விளம்பரங்களில் கேட்டிருப்போம். அப்படிப்பட்ட பாடங்களில் ஒன்று, செயல் அளவில் எந்தப் பணியிலும் நம்மை வெற்றிக்கு வழிநடத்திச்செல்லும் “மறைவான ஆதாரமூலங்களைக் கண்டுபிடிக்க” நமக்கு உதவுவதாக உரிமைகோருகிறது. *The Sound of Music* என்ற அந்தத் திரைப்படத்தை நாம் கவனித்துக் கொண்டிருக்கையில், மரியா என்ற பெண்ணுக்கு ஒரு பெரிய மற்றும் கடினமான வீட்டாரிடம் தங்கி [பிள்ளைகளுக்கு] போதிக்கும் புதிய பொறுப்பு பற்றி கூறப்பட்ட பின்பு அவளது ஆர்ப்பரிக்கும் ஆவி பற்றி நாம் மகிழ்வூட்டப்படுகிறோம். நாம் களிப்படையும்படி அவள், “நான் எனக்குள் நம்பிக்கை கொண்டுள்ளேன்” என்று பாடியவாறே வேலைக்குச் செல்லுகிறாள்.

நமது திறமையில் நம்பிக்கையில்லாத நிலையில் ஒரு சில அறைகூவல்கள் மாத்திரமே சந்திக்கப்பட முடியும் என்பது உண்மையாக இருக்கையில், சுயநம்பிக்கையானது சிதைக்கக் கூடியதாகவும் அபாயகரமானதாகவும்

ஆகக்கூடும் என்பதும் உண்மையாக உள்ளது. பொதுஜனத் தலைவரின் சுயநம்பிக்கையானது அவர் தமது சொந்த பலம் பற்றி அதிகமாய் மதிப்பிடவும் தமது சொந்த திறமைகளில் மதியீனமான நம்பிக்கை கொள்ளவும் வழிநடத்தலாம். சுய உதவி பாடமானது, நம்பிக்கை என்பது எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்காமலேயே, தன்னம்பிக்கை என்பது தன்னில்தானே ஒரு இலக்காக இருக்கிறது என்று மறைமுகமாய் உணர்த்தக்கூடும். குறிப்பிட்ட எந்தக் காரணமும் அல்ல, ஆனால் சுய நம்பிக்கை என்பதே நம்மை முன்னேற்றிக் கொள்வதற்கு ஒரு திறவுகோலாக உள்ளது என்பது கீழ் உள்ள யூக மாக இருக்கக்கூடும். இவ்வாறாக, "நான் எனக்குள் நம்பிக்கை கொண்டுள்ளேன்" என்ற மரியாவினுடைய பாடலின் வார்த்தைகளில் அபாயம் உள்ளது.

சபை ஊழியத்தில் நம்பிக்கை என்பது முக்கியமான காரணியாக உள்ளது. போதகர், மூப்பர் மற்றும் உதவிக்காரர் ஆகியோருக்குக் குறிப்பிட்ட வகையிலான நம்பிக்கை என்பது அவசியமானதாக உள்ளது. ஆனால் எவ்வகையான நம்பிக்கையை நாம் காட்சிப்படுத்துகிறோம் என்பது பொருட்படுத்தப்படக் கூடியதாக உள்ளது. சில மக்கள் நடத்துவத் திற்கான அழைப்பைப் பணிப்பொறுப்பினால் மூழ்கடிக்கப்படும் வகையில் பதில் செயல் செய்கின்றனர். அவர்கள், தேவனுடைய காரியங்களில் ஈடுபடுவது மிகச் சிறந்தவற்றைக் கேட்கின்றன என்று சரியாகக் காண்கின்றனர். தேவனுடைய நோக்கத்திற்கானவைகள் அசாதாரணமானவற்றைக் கேட்கும் காரணத்தினால், அவர்கள் பொறுப்பை ஏற்றுக்கொள்வதைத் தவிர்க்கின்றனர். மற்றவர்கள் தங்கள் சொந்தத் திறமைகளின்மீது முழு உறுதிப்பாட்டுடன், ஒரு முக்கியமான பணிப்பொறுப்பை அணுகுகின்றனர். அவர்கள், வியாபாரம் மற்றும் தொழில்திறன்சார் உலகப் பணிகளில் செயல்படும் தைரியம் கிறிஸ்தவ ஊழியத்திற்கும் ஏற்புடையதாயிருக்கும் என்று எடுத்துக் கொள்கின்றனர். அவர்கள் வேறு எந்த வகையான நடத்துவத்தைப் போலவே, "நம்மை விற்றுப் போடுதல்" என்பதேயே சபையின் நடத்துவத்திலும் மேற்கொள்கின்றனர். 2 கொரிந்தியர் நிருபம் கருத்தாகத் தெரிவிக்கிறபடி, இவ்விரு அணுகுமுறைகளுமே கிறிஸ்தவ அணுகுமுறையை மாற்றுபவையாக உள்ளன.

மூன்றாம் அதிகாரத்தில் பவுல், கொரிந்து சபைக்குத் தமது நம்பிக்கைகளை உறுதிப்படுத்துகிறார்: "நாங்கள் தேவனுக்கு முன்பாகக் கிறிஸ்துவின் மூலமாய் இப்படிப்பட்ட நம்பிக்கையைக் கொண்டிருக்கிறோம்" (3:4). பிற்பாடு அவர், "மிகவும் தாராளமாய்ப் பேசுகிறோம்" என்று கூறுகிறார் (3:12). எனவே, தமக்கு முன்பாக உள்ள பணிப்பொறுப்பில் அச்சுறுத்துப்படுவதை மறுக்கும் ஊழியருக்கு, ஊழியத்தில் நம்பிக்கை, தைரியம் மற்றும் விடுதலை (3:17) ஆகியவை இப்புத்தகத் தின் முக்கிய விஷயமாக உள்ளது. கிறிஸ்தவர் தமது பணிப்பொறுப்பை நிறைவேற்றுவதில், அவரது நம்பிக்கை என்பது, கிறிஸ்தவரின் அடையாளமாக உள்ளது.

## எவ்வகையான நம்பிக்கை? (3:4-6)

பவுல் தமது ஊழியத்தைப் பற்றி நம்பிக்கையாயிருக்கக் காரணம் எதையும் கொண்டிருந்தது இல்லை என்று மற்றவர்கள் கருத்துத் தெரிவித்ததால், அவர் அந்த வார்த்தைகளை எழுதினார் என்பது உறுதி. அளவிடப்பட முடியாத தன்னம்பிக்கையுடன் கொரிந்து நகருக்கு வந்திருந்த மற்றவர்கள், தங்களை

"கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள்" என்று அழைத்துக் கொண்டனர் (11:23). 3:1ன்படி, அவர்கள் தங்கள் மாபெரும் ஊழியங்களை விவரித்த "உபசார நிருபங்களுடன்" வந்தனர். அவர்கள் இடைவிடாது "தங்களைத்தாங்களே மெச்சிக்கொண்டனர்" (10:12) என்பது, அவர்கள் தன்னம்பிக்கையில் குறைவுபட்டிருக்கவில்லை என்பதைக் காண்பிக்கிறது. பவுல் உபசார நிருபத்தைக் கொண்டு வரத் தவறிய அவரது சுய தவறானது, அவர் தமது ஊழியத்தில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை என்பதைக் குறிக்கிறது என்று அவர்கள் கூறியிருந்தனர் என்பது தெளிவு. இவ்வாறாக அவர்கள், மற்றவர்களைக் கொண்டு தங்களை அளத்தனர், ஊழியம் செய்வதற்கான தங்கள் தகுதியை அவர்கள் ஒருக்காலும் சந்தேகிக்கவில்லை.

இவ்வகையான தன்னம்பிக்கைக்குப் பதில் தருவதற்குப் பவுல், "நாங்கள் தேவனுக்கு முன்பாகக் கிறிஸ்துவின் மூலமாய் இப்படிப்பட்ட நம்பிக்கையைக் கொண்டிருக்கிறோம்" என்று வலியுறுத்துகிறார் (3:4). அவரது நம்பிக்கையானது கள்ளப்போதகர்களின் நம்பிக்கையில் இருந்து மாறுபட்ட வகையாக இருந்தது, ஏனெனில் அவர், "எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பதுபோல ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல ..." என்று கூறுகிறார் (3:5). தேவனுடைய காரியங்கள், மனித ஊழியர்கள் எவரும் அவரது [தேவனுடைய] திட்டங்களைச் செயல்படுத்தத் திறனுள்ளவர்களாக இருக்க இயலாத அளவுக்கு மிகவும் மாபெரியதாக உள்ளது. எதிராளிகள் அனேக மாகத் தாங்கள் பெற்றிருந்த உபசார நிருபங்களில், பணிப்பொறுப்புக்குத் திறன் வாய்ந்தவர்கள் என்று உரிமை கோரியிருந்திருப்பார்கள். இந்த அம்ச மானது கிறிஸ்தவ ஊழியத்தில் நமது நம்பிக்கை பற்றிய தனிச்சிறந்த உண்மையாக உள்ளது. நாம் நமது தனிப்பட்ட திறமையின்மையைப் பற்றி அறிந்திருக்கிறோம்; இருப்பினும் நாம் நமது ஊழியங்களில் நம்பிக்கையாக இருக்கிறோம்.

சிலர் தங்களை "தகுதியானவர்கள்" என்று உரிமைகோரிக்கொண்டிருந்தனர் என்பதால், "தகுதியானவர்கள்" என்பதற்குப் பவுலின் (*hikanos* என்ற) வார்த்தை, கொரிந்தியர்களுடன் அவரது கலந்துரையாலில் முக்கியமானதாக இருந்தி ருக்கலாம். தேவனுடைய வெற்றிகரமான கொள்கை பற்றிப் பவுல் பேசியபின்பு, அவர் "இவைகளை நடப்பிக்கிறதற்கு எவன் தகுதியானவன் [*hikanos*]?" என்று கேட்டார் (2:16). "எவரொருவரும் இல்லை" என்பதே மறைமுகமான பதி லாக உள்ளது. மற்றவர்கள் அனேகமாக, பவுலின் பேச்சுத்திறன் மற்றும் அவரது வலுவற்ற உடல்நலம் ஆகியவற்றில் வெளிப்படையாகத் தெரியக்கூடிய பலவீனங்களை உற்றிக்கவனித்து, அவர் "தகுதியானவரல்ல" என்று முடிவு செய் திருக்கலாம். அந்தக் குற்றச்சாட்டைப் பவுல் முற்றிலுமாக ஏற்றுக்கொண்டார்.

பவுல் திறமையற்றவராக இருக்கிறார் என்று குற்றச்சாட்டை அவர் ஒப்புக்கொண்டார், ஆனாலும் அவர் இன்னமும் தமது நம்பிக்கையைப் பற்றிப் பேசுகிறார் என்பது நேர்மாறாக உள்ளது. "எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது. புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி, அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார். அந்த உடன்படிக்கை எழுத்திற் குரியதாயிராமல், ஆவிக்குரியதாயிருக்கிறது; எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது" என்பதே காரணமாக உள்ளது (3:5, 6). பவுலின் நம்பிக்கையானது அவரது சொந்த வரங்கள் மற்றும் வல்லமைகள் ஆகியவற்றில் இருந்து வரவில்லை; தம்மை, தேவனுடைய வல்லமையே அழைத்துள்ளது

மற்றும் தம்மைத் தேவன் அவரது திட்டத்தில் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பதை அவர் அறிந்திருக்கிறார்.

தேவன் தமது ஊழியத்தை எப்போதுமே தமது “பணிவிடைக்காரர்கள்” அல்லது “ஊழியர்கள்” மூலமாகவே செய்துள்ளார், அவர்களில் பெரும்பான்மை யானவர்கள் தனிச்சிறந்த வகையிலான கவர்ச்சி எதையும் கொண்டிருந்தது இல்லை. பழைய உடன்படிக்கையின் ‘‘ஊழியக்காரரான’’ மோசே, தமது தகுதிகள் குறித்துத் தீவிரமான சந்தேகங்களைக் கொண்டிருந்தார் (cf. யாத்திராகமம் 4:10). இருப்பினும் தேவன் தமக்காகப் பேசும்படி “அவரைத் தகுதியானவராக்கினார்.’’ ஆமோஸ், தாம் ஒரு தீர்க்கதரிசியோ அல்லது தீர்க்கதரிசியின் மகனோ அல்ல என்பதை வலியுறுத்தினார் (ஆமோஸ் 7:14). இருந்தபோதிலும், தேவன் “அவர்களைத் தகுதிப்படுத்திய’’ காரணத்தினால், அவர்கள் திறன்கொண்டவர்களாயினர். தேவன் பவுலைத் தீர்மானமுள்ள ஒரு கொள்கையில் பயன்படுத்த முடியும் என்ற உறுதிப்பாட்டில் இருந்து பவுலின் திறன் வளர்ந்து வெளிவந்தது.

இந்தக் காரணம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே எரேமியாவினால் அறிவிக்கப்பட்டிருந்தது, அவர், தேவன் “இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணும்’’ ஒரு புதியநாளைப் பற்றி விவரித்தார் (எரேமியா 31:31). இந்த உடன்படிக்கையானது, கல்லின்மீது எழுதப்பட்ட பழைய உடன்படிக்கையைப் போலின்றி, “அவர்கள் இருதயத் திலே எழுதி” வைக்கப்படும் (எரேமியா 31:33). மோசே பழைய உடன்படிக்கைக்கு ஊழியக்காரராக இருந்தது போன்றே, பவுல் அந்த உடன்படிக்கைக்கு ஊழியக்காரராக இருப்பதாக அசாதாரணமாக உரிமை கோரினார். அவரது வாசகர்களே அவருக்கு உபசார நிருபமாக இருக்கின்றனர், அந்த நிருபம் “இருதயங்களாகிய சதையான பலகைகளிலேயும் எழுதப்பட்டிருக்கிறது’’ (3:3), அது “(எங்கள்) ஊழியத்தினால் உண்டாகிய” (3:3; நேரடி அர்த்தத்தில், பவுலினால் “ஊழியம் செய்யப்பட்டதால்’’ உண்டாகிய) நிருபமாக இருக்கிறது. அதாவது, அவர் தமது ஊழியத்தின் விளைவுகளை ஏற்கனவே கண்டிருக்கிறார். தேவனுடைய புதிய உடன்படிக்கையை மனிதர்களுக்கு “கொடுக்கும் மனிதர்’’ என்ற வகையில், அவர் ஏற்கனவே தமது ஊழியத்தின் மூலமாக வாழ்வுகள் மாறி யிருந்ததைக் கண்டிருக்கிறார். தேவனுடைய சித்தம் “தனது இருதயத்தில் எழுதப்பட்ட’’ நிலையில் உள்ள ஒரு சபையானது, பவுலினால் ஜீவனுள் ளதாயிற்று. இதன்விளைவாக அவர், ‘‘நாங்கள் தேவனுக்கு முன்பாகக் கிறிஸ்துவின் மூலமாய் இப்படிப்பட்ட நம்பிக்கையைக் கொண்டிருக்கிறோம்’’ என்று கூறுகிறார் (3:4). இது “தன்னம்பிக்கை” என்பதன் பிரபலமான கருத்தி லிருந்து வேறுபட்டிருந்தது.

பவுலின் நம்பிக்கையின் வகையானது பிரபலமான (மற்றும் எதிராளிகளின்) சுயசார்புத் தன்மையையும் மிகப்பெரியதாகக் காணப்படும் பணியினால் மூழ்கடிக்கப்பட்டிருப்பதால் ஏற்படும் எதிர்மறைச் சிதைவையும் தவிர்த்தது. இவ்விரு கோணங்களின் கூற்றுமே, சபைக்குத் தற்கால சோதனைகளாகவும் சம அளவில் பேரழிவை விளைவிப்பதாகவும் உள்ளன. நாம் சாதாரணமாக, 3:1ல் உள்ள உபசார நிருபங்களைப்போல், நமது சாதனைகளைப் பட்டியலிடுவதற்குப் புள்ளியியல் விபரங்ளைச் சுட்டிக்காட்டும் அழுத்தத்தின் கீழ் இருக்கிறோம். “நமக்குப் பேர் உண்டாகப் பண்ணுவோம் வாருங்கள் என்று’’ கூறி (ஆதி

யாகமம் 11:4), பாபேல் கோபுரத்தைக் கட்டிய மனிதர்களைப்போல், சபைகள், மற்றவர்கள் மத்தியில் தங்கள் மேன்மையைக் கட்டியெழுப்பும் பொதுஜன உறவுகளின் வகைகளில் ஈடுபட்டு "தங்களை விற்றுப்போடக்கூடும்." திறமைகள் என்பவை, நமது சமூகத்தின் எஞ்சியுள்ள மற்றவர்களிடத்தில் ஊழியத்தின் தர அளவையைக் கொண்டு அளக்கப்படக்கூடும். ஊழியர்களையும், போதகர்களையும், சுவிசேஷகர்களையும் மற்றவர்களையும் நாம், வெற்றியின் செயற்கையான தர அளவையைக் கொண்டு மாத்திரம் அளவிடக்கூடும். மற்றவர்களின் சுயசார்புத் தன்மைக்குப் பவுலின் பதிலுரையானது சபைக்கு உதவி நிறைந்ததாக இருக்கலாம். நமது நம்பிக்கை என்பது நமது திறமைகளில் இருப்பதில்லை, ஆனால் உண்மையில் "நமது தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது" என்ற உண்மையில் இருக்கிறது. நாம், "நம்மீதல்ல, ஆனால் மரித்தோரை எழுப்புகிற தேவன்மேல் நம்பிக்கையாயிருக்க" வேண்டும் (1:9).

## பழைய ஏற்பாட்டில் இருந்து ஒரு பாடம் (3:7-16)

பவுல் தமது கருத்தை நிலைநாட்டுவதற்குப் பழைய ஏற்பாட்டை அடிக்கடி மேற்கோள் காண்பித்தாலும், விரிவானதொரு பாடத்திற்கு அதை அவர் அரிதாகவே பயன்படுத்துகிறார். ஆகவே நாம், 3:7-16ல், பவுலின் ஊழியத்திற்கான அவரது தற்காப்பு வாதத்தின் மத்தியில், அவர் பழைய ஏற்பாட்டிலிருந்து நீண்டதொரு பாடத்தைத் தரவழைக்கிறார் என்பது குறித்து வியப்படைகிறோம். மோசே சீனாய் மலையின்மீது தேவனுடன் பேசிய பின்பு, ஒளிவீசும் முகத்துடன் மலையிலிருந்து கீழே இறங்கி வந்த நிகழ்ச்சியைப் பவுல் நினைவுக்குக் கொண்டுவருகிறார் (யாத்திராகமம் 34:29-35). இந்த வரலாறு, மோசேயை மற்றவர்களிலிருந்து தனிப்பட்டதாக வைத்த மோசேயின் மகிமையையும் வல்லமையையும் முழுவதுமாக தெரிவிக்கிறது. மோசேயின் தனிச்சிறந்த மகிமையைக் காண்பிக்க இது பல நூற்றாண்டுகளாக ரபீக்களால் சொல்லப்பட்டிருந்தது. மோசே மக்கள் முன்னிலையில் பிரசன்னமானபோது முக்காட்டை அணிந்திருந்தார் என்ற உண்மையானது, அவரது ஊழியத்தின் பயபக்திக்குரிய தன்மையைச் சுட்டிக்காண்பித்தது. பவுல் தமது சொந்த ஊழியத்தைப் பற்றிப் பேசுவதற்காக, மகிமையுள்ள அந்த ஊழியத்தின் வரலாற்றைத் தேர்ந்துகொள்கிறார்.

குறிப்பிட்ட இவ்விடத்தில் அந்த வரலாற்றில் இருந்து ஒரு பாடத்தைத் தரவழைப்பதைப் பவுல் தேர்ந்துகொண்டது ஏன் என்பது பற்றி நாம் நிச்சயமாக எதுவும் கூற இயலாது. இதை அவர் வேறு எவ்விடத்திலும் குறிப்பிடுவதில்லை. எதிராளிகள் மோசேயைப் போலத் தாங்களும் மகிமையுள்ளவர்களாயிருந்ததாக உரிமைகோரியிருக்கச் சாத்தியக்கூறு உள்ளது. மோசேயின் வல்லமையான செயல்கள் மற்றும் குறிப்பிடத்தக்க தோற்றம் ஆகியவற்றின் தர அளவைப்படி பார்த்தால், பவுல் ஒன்றும் இல்லாதவராக இருந்தார். ஒப்பீட்டில் பார்க்கையில் அவரது ஊழியம் மனதில் பதிவதாக இருக்கவில்லை. மோசேயுடன் ஒப்பிடுதல் என்பது பவுலைச் சிறுமைப்படுத்துவதாகவும், அவரது ஊழியம் நலிவானதாகவும் மகிமையற்றதாகவும் இருந்தது என்று காண்பிப்பதாகவும் இருந்தது. மோசேயின் ஊழியம், பலத்த செயல்கள் மற்றும் வல்லமை நிறைந்ததாக இருந்தது. மற்றவர்கள் மோசேயை தங்கள் மாதிரியாகக் கொண்டிருந்தாலும், பவுல் மோசேயின் ஊழியத்தின் மகிமையை மறுதலிக்கவில்லை. "மகிமை" (*doxa*; NIV, "glory")

என்ற வார்த்தை 3:7-11ல், மோசே ஈடுபட்டிருந்த "ஊழியத்தை" குறிப்பதற்குத் திரும்பத் திரும்பப் பயன்படுத்தப்படுகிறது. பவுல் பழைய ஏற்பாட்டை வாசித்து அது தேவனிடத்தில் இருந்து வந்துள்ளது என்பதை அறிந்திருக்கிறார். அந்த மகிமை தேவனிடத்தில் இருந்து வந்துள்ள காரணத்தால், அவ்வரலாற்றில் பிரகாசிக்கும் ஒளிக்கதிர் இருக்கிறது. அப்போதிருந்த ஊழியம் மனித னால் படைக்கப்பட்டதாக இருக்கவில்லை. மோசேயின் பிரகாசிக்கும் முகமா னது, அந்த மனிதரின் ஊழியத்திற்குப் பின்னால் தெய்வீக வல்லமை இருந்தது என்பதற்கு ஒரு நினைவூட்டுதலாக இருந்தது.

கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டில் வேரூன்றி இருக்கும்போது மாத்திரமே தங்கள் பணிப்பொறுப்பைப் புரிந்துகொள்கின்றனர் என்பதை அவர்கள் நினைவுக்குக் கொண்டுவருதல் அவசியமாயிருக்கிறது. தொடக்ககால சபையானது பழைய ஏற்பாட்டில் இருந்து புதிய ஏற்பாட்டைத் துண்டிக்க ஒருக்காலும் விரும்பியதில்லை. தேவனுக்கான நமது ஊழியம், மோசேயின் ஊழியத்தினுடைய தொடர்ச்சியாகவே உள்ளது. ஆகவே "கர்த்தருடைய வசனத்தை" தீர்க்கதரிசிகள் மூலமாகத் தரப்பட்டிருந்தது என்ற வகையிலேயே நாம் கவனித்துக் கேட்கிறோம். பவுல் செய்தது போலவே நாமும், முதல் உடன்படிக்கை "மகிமையுடன் வந்தது" என்பதைப் புரிந்துணர்ந்துகொள்கிறோம் (3:7). இந்த மாபெரும் வெளிச்சம் இல்லாத நிலையில் நாம் வளம் குன்றியவர்களாக இருப்போம் என்று நாம் அறியும்படியான அப்படியொரு வல்லமையினால் இது நிரப்பப்பட்டிருக்கிறது.

3:7-11ல் முடிவில்லாத அதிகப் பிரகாசமான மகிமை விவரிக்கப்படுகிறது. மோசேயின் ஊழியம் பெரும் சிறப்புடன் வந்தது என்பதைப் பவுல் ஒப்புக்கொண்டிருக்கையில், ஆவியானவரின் ஊழியம் அதைக்காட்டிலும் மாபெரும் மகிமையைக் கொண்டுள்ளது என்று அவர் காண்பிக்கிறார். மோசே மலையில் இருந்து இறங்குகையில் அவரது மகிமைப்பிரகாசமானது, பவுலின் ஊழியத்தோடு ஒப்பிடுகையில் ஒன்றுமற்றதாயிருந்தது. இந்த ஊழியமானது உலகத்தின் இருளில் பிரகாசிக்கும் தேவனுடைய நிறைவான/இறுதியான வெளிச்சமாக உள்ளது. இது மக்களின் வாழ்வை மாற்றவும் அவர்களை "நீதியில் திரும்பக் கட்டுவிக்கவும்" வல்லமையைக் கொண்டுள்ளது (3:9). முந்திய வெளிச்ச மானது பிரகாசமாக ஒளிவீசியிருக்கையில், இந்த மாபெரும் வெளிச்சத்துடன் ஒப்பிடுகையில் தனது சுடரொளிப் பிரகாசத்தை இழந்திருக்கிறது (3:10).

பவுலின் ஊழியம் தாக்குதலின் கீழ் உள்ளது என்பதை அவர் அறிகிறார் மற்றும் அவருக்கு இடர்ப்பாடுள்ள சபையொன்றுடன் பலனற்றதாகக் காணப்படும் முயற்சியில் அவர் ஏன் தொடர்ந்து செயல்படுகிறார் என்பது பற்றி அறைகூவல் விடுக்கப்பட்டது. பவுல் இவ்வசனப்பகுதியில், ஊழியங்களை ஒப்பிடுகிறார். மோசேயின் ஊழியத்தைப் பார்க்கிலும் அதிகமகிமையான பணிப்பொறுப்பிற்கு தாம் அழைக்கப்பட்டுள்ளதை அவர் அறிகிறார். மற்ற வர்களோ, அவரது "தெய்வீகசக்தி" [அல்லது] "ஆவிக்குரிய வல்லமை" மற்றும் மகிமை குறைவுபட்டிருத்தலினால் அவர் ஊழியக்காரராக இருக்கத் திறனற்றவராக உள்ளார் என்று உரிமைகோருகின்றனர். ஆனால் ஊழியத்தின் இந்தப் புதிய வகையானது, மற்றவர்கள் எதிர்பார்ப்பதிலிருந்து மாறுபட்ட வகையிலான மகிமையைக் கொண்டுள்ளது என்பதை அவர் அறிகிறார். உலகத் தின் மிக முக்கியமான இயக்கத்திற்குத் தேவனுடைய முகவராக அவர் [பவுல்] இருக்கிறார்.

*பவுலின் எதிராளிகள் தங்களின் ஊழியத்தினுடைய "மகிமையானது" - கண்ணால் காணக்கூடிய சாதனைகள் மற்றும் அனுபவங்களின் மீதான வலியுறுத்தம் - மோசேயின் பிரகாசிக்கும் முகம்போன்றே காணப்படக்கூடியதாக உள்ளது என்று கூறினர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் மகிமையை அளவிடும் வேறொரு வழியைப் பவுல் சுட்டிக்காண்பிக்கிறார். சிலுவையில்கூட மகிமை உள்ளது. மற்றவர்களுக்குச் சிலுவையைத் தெளிவாகக் காண்பித்தல் என்ற மகிமையின் மாறுபட்ட வகைக்கு, தேவன் தமது மக்களை அழைத்திருக்கிறார் என்று சபைக்கு நினைவூட்டுதல் அவசியமாக உள்ளது.*

*பழங்காலங்களில் உற்றுக்கவனித்தவர்கள், பவுலைப் போன்று மனதை ஈர்க்காத ஒரு நபர், எவ்வாறு இவ்விதமான உறுதிப்பாட்டுடன் பேசமுடிந்தது என்று, கொரிந்து சபையாருடன் இணைந்து வியப்படைந்திருப்பார்கள். மோசேயின் ஊழியத்தில் இருந்து பவுல், "நாங்கள் இப்படிப்பட்ட நம்பிக்கையை உடையவர்களாதலால், மிகவும் தாராளமாய்ப் பேசுகிறோம்" என்று முடிவு செய்கிறார் (3:12). அவர் பணிப்பொறுப்பினால் அச்சுறுத்தப்படாதிருக்கிறார். "தைரியம்" [இது தமிழ் வேதாகமத்தில் "தாராளமாய்" என்றுள்ளது] (parrhesia) என்பது பவுலின் ஊழியத்தில் பிரதான பண்பாக உள்ளது. தகுதிச்சான்றிதழ்கள் பற்றிக் கேள்வியெழுப்பப்பட்டிருந்த இந்த மனிதரின் தொனியானது 3ம் அதிகாரத்தில், "நம்பிக்கை" (3:4) மற்றும் "தைரியம்" [தமிழ் வேதாகமத்தில் "தாராளம்"] (3:12) உள்ளதாக மற்றும் "விடுதலை" (3:17) கொண்டதாக உள்ளது. அவரது ஊழியத்தை மற்றவர்கள் அறைகூவல் விடுத்த போதிலும், அவர் விடுதலையானவராக இருக்கிறார். அவர், மேலோங்கியுள்ள ருசிகளுக்கு ஏற்றவாறு தமது செய்தியை மாற்றவில்லை அல்லது நம்பி இணங்காதவர்கள் முன்னிலையில் அவர் அமைதியாக இருந்துவிடவும் இல்லை.*

*"தைரியம்" என்பதற்கு பவுலின் வார்த்தையானது பழங்கால உலகத்தில், பொதுமக்களிடம் பிரபலமாயிருந்தவர்கள் மத்தியில் ஒரு முக்கியமான வார்த்தையாக இருந்தது. இவ்வார்த்தை "பேச்சின் தாராளத்தன்மை" என்று அர்த்தப்படுகிறது [எனவேதான் இது தமிழ்வேதாகமத்தில் "தாராளமாய்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது]. இது, அரசர் அல்லது எதேச்சாதிகாரி முன்னிலையில் பயமில்லாது நின்று, சந்தோஷமற்றதாக இருந்தாலும் சத்தியத்தை எடுத்துரைக்கும் ஞானமுள்ள மனிதரின் நடத்தையை விவரித்தது. மகா அலெக்சாண்டரால் சந்திக்கப்பட்டு, அந்த மாபெரும் தளபதி ஏதேனும் உதவி செய்ய முடியுமா என்று கேட்கப்பட்டவரான, நல்லவற்றில் நம்பிக்கையற்ற தன்மை என்ற கருத்துருவாக்க நிறுவனத்தைத் தோற்றுவித்தவரான தியோனிஜெஸ் என்பவரைப் பற்றிய வரலாறு ஒன்று கூறப்பட்டுள்ளது. "எனது சூரியனுக்குச் சற்று வெளியே நில்" என்பதே அவரது பதிலாக இருந்தது. ஏனெனில் அவர் தமது செய்தியைப் பற்றி அவ்வளவு நிச்சயமுள்ளவராக இருந்தார், அவர் தமது முற்றான விடுதலை மற்றும் தைரியம் என்பவற்றால் அறியப்பட்டவராக இருந்தார்.*

*பவுல் தமது ஊழியத்தின் மகிமையினால் விடுதலை (3:17) மற்றும் தைரியத்துடன் (3:12) பேசினார். மோசே தமது ஊழியத்தின் ஒழிந்து போகிற மகிமையை இஸ்ரவேலிடமிருந்து மறைப்பதற்கு, முக்காட்டைப் பயன்படுத்தியிருந்தார் என்பது (3:13), பவுலின் நாட்களில் கூடப் பலரைக் குழப்பத்தில் ஆழ்த்தி அவர்களின் புரிந்துகொள்ளுதலில் "முக்காடு" இட்டிருந்தது. தங்கள்*

சாதனைகள் பற்றி மேன்மையாகப் பேசுகிறவர்கள் உட்படச் சிலர், இன்னும் “தங்கள் மனங்களில்” அந்த முக்காட்டைக் கொண்டுள்ளனர் (3:14, 15) ஏனெனில் அவர்கள் புதிய உடன்படிக்கையின் மாபெரும் மகிமையைப் புரிந்துணர்ந்து இருப்பதில்லை. அவர்களைப் பொறுத்தமட்டில், வரையைறக்கு உட்பட்ட அவர்களுடைய கருத்து நோக்கின்படி, பவுலின் நம்பிக்கை மதியீனமானதாக உள்ளது மற்றும் அவரது ஊழியம் மனதை ஈர்க்காததாக உள்ளது. ஆனால் மாபெரும் மகிமையைக் காண்பதற்கு, “கர்த்தரிடத்தில் மனந்திரும்பி” இருக்கும் ஒருவரின் விடுதலையைப் பவுல் கொண்டிருக்கிறார் (3:16, 17). சத்தியத்தைப் போன்று விடுதலையாக்குவது வேறு எதுவும் இல்லை. அவர், “அவர்கள் கர்த்தரிடத்தில் மனந்திரும்பும்போது, அந்த முக்காடு எடுபட்டுப்போம்” என்று கூறுகிறார் (3:16). கிறிஸ்துவை நாம் எதிர்கொள்ளும் இந்த நிகழ்ச்சியானது நம்மை விடுதலையாக்குகிறது: “கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு” (3:17).

## மறுரூபமாக்கப்பட்டு இருத்தல் பற்றி (3:18)

“நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ... அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிற” போது, இந்த அசாதாரண மான விடுதலை அனுபவிக்கப்படுகிறது (3:18). இப்போது “நாமெல்லாரும்” - பவுலும் சபை முழுவதும் - அவரை [தேவனை]ப் போலாக்கப்படுகிறோம். 1 யோவான் 3:2ல் “அவருக்கு ஒப்பாயிருப்போமென்று” நமக்குக் கூறப்படுகிறது. “மறுரூபப்படுகிறோம்” என்பதற்கான வார்த்தையானது, ஆங்கில மொழியில் “metamorphosis” என்று ஆகியுள்ள, *metamorpheo* என்ற கவனத்தை ஈர்க்கும் கிரேக்க வார்த்தையாக உள்ளது. இவ்வார்த்தையானது, கிறிஸ்தவ அனுபவம் என்பது ஒரு கிறிஸ்தவர் கிறிஸ்துவைப் பற்றிக்கொள்ளுகையில் அவர் அனுபவிக்கும், “வடிவத்தில் மாற்றம்” அல்லது “உருவத்தில் மாற்றம்” என்பதைக் கருத்தாகத் தெரிவிக்கிறது. நமது மனம் புதிதாகிறதினால் நாம் “மறுரூபமாகிறோம்” (*metamorpheo*) என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது (ரோமர் 12:2). கலாத்தியர் 4:19ல் பவுல், “கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் ...” என்று கூறுகிறார்.

கிறிஸ்தவர், தாம் பற்றிக்கொண்டிருப்பதினால் “உருவாக்கப்படுகிறார்.” நாம் கிறிஸ்துவின் மகிமையைப் பற்றிக்கொண்டிருந்தால், மோசேயைப் போன்றே நாமும் அந்த மகிமைக்குள் மாற்றப்படுவோம். “பற்றிக்கொள்ளுதல்” என்பதற்கான (*kaloptrizomai* என்ற) வார்த்தையானது, கண்ணாடியில் “உற்றுப்பார்த்தல்” அல்லது “புரிந்துணர்ந்துகொள்ளுதல்” என்பதற்குப் பயன்படுத்தப்பட்ட பலத்த வார்த்தையாக உள்ளது. இந்த வார்த்தை, தண்ணீர்த் தடாகம் அல்லது அறைகுறையான கண்ணாடி ஒன்றில் கண்ணோக்குதல், நிலையான உற்றுப்பார்த்தல் மற்றும் கவனமாகப் புரிந்துணர்தல் என்பதைக் கருத்தாகத் தெரிவிக்கிறது. இந்த வார்த்தை, நோக்கத்துடன் உற்றுப்பார்த்தல் என்ற தனது கருத்துடன், கிறிஸ்தவர்களுடைய, கிறிஸ்துவைப் புரிந்துகொள்ளும் தன்மைக்கு ஏற்புடையதாக உள்ளது.

நாம் பற்றிக்கொள்ளும் விஷயம் எதுவோ, அது நம்மை உருவாக்குகிறது. வெட்கக்கேடாக உள்ளதை நாம் பற்றிக்கொண்டிருந்தால், நாம் வெட்கத்தைப் பிரதிபலிப்போம். பவுலின் எதிராளிகளைப்போன்று, நாம் நமது கலாச்சாரத்

தின் மதிப்பீடுகளினால் உருவாக்கப்பட்டிருந்தால், சந்தையிடங்களில் பயன்படுத்தப்படுகிற அதே தர அளவைகளினால் நாம் நமது திட்டங்களை அளவிடுவோம். சபையானது ஒன்றும் கூறுவதற்கில்லை என்ற நிலையில் விடப்படும். அது மற்றவர்களின் பிரதிபலிப்பாக மாத்திரம் இருக்கும். ஆனால் நமது நிலையான உற்றுப்பார்த்தலானது, மற்றவர்களுக்காகத் தம்மையே ஒப்புக்கொடுத்த ஒரு மனிதரின் பிரகாசிக்கும் வெளிச்சத்தின் மீதிருந்தால், நாமும் அவரது மகிமையின் வகைக்கு மாற்றப்படுவோம். அவரால் நாம் மாற்றப்பட்டிருந்தால், நாம் பவுலின் நம்பிக்கை, தைரியம் மற்றும் விடுதலை ஆகியவற்றில் பங்குகொள்ள முடியும்.

கிறிஸ்தவர்கள் விருப்பநோக்கத்துடன் உற்றுப் பார்க்கும் விஷயத்தினால் “மறுரூபமாக்கப்” பட்டுள்ளனர் என்றால், இது கிறிஸ்தவரின் தனிச்சிறப்பான அடையாளமாக இருக்கும். நாம் எல்லாரும் சுயநலம் இல்லாத அன்பின் வரலாற்றினால் உருவாக்கப்பட்டிருப்போம். தேவனுடைய மகிமை பற்றிய வரலாற்றைத் தங்கள் வாழ்வில் பிரதிபலிக்கப் போதுமான அளவுக்கு, “தேவனுடைய மகிமையைப் பற்றுகிற” வாய்ப்பைக் கொண்டிருந்த நடத்துனர்களை நாம் நாடுவோம். நமது ஊழியங்கள் ஒரே ஒரு நிபந்தனையினால் முடிவுசெய்யப்படும்: அவைகள், ஊழியம் செய்வதற்காக வந்த ஒருவருடைய விருப்ப நோக்கத்தைப் பிரதிபலிக்கும்.

## முடிவுரை

ஹிட்லரின் ஆட்சிக் காலத்தின்போது, நாஜிகளின் நீதிமன்றத்தில் ஆஜராகும்படி, அர்ப்பணிப்புள்ள ஒரு விசுவாசிக்கு ஆணையொன்று அனுப்பப்பட்டது. அந்த விசுவாசி தமது நடவடிக்கைகள் பற்றிய கேள்விகளுக்கு உண்மைநிறைந்த வகையில் பதில் அளித்துக்கொண்டிருக்கையில், அந்த அறையில் அவர் ஒருவர் மாத்திரமே விடுதலையான நபராக இருந்தார் என்ற நிலை அவருக்கு உண்டாயிற்று. நீதிபதியும் SS படையினரும் அச்சுறுத்தலான நிலையில் வாழ்ந்துகொண்டிருந்தனர். அவர்களின் முகங்கள் அவர்களுடைய மனக்கவலையைக் காட்டிக்கொடுத்தன. இன்னொரு கர்த்தரைச் சேவித்திருந்த அந்த விசுவாசி ஒருவர் மாத்திரமே விடுதலையானவராக இருந்தார். இந்த உண்மையானது அவருக்குப் பேசுவதற்கான தைரியத்தை/நம்பிக்கையைக் கொடுத்தது.

நம்பிக்கை என்பது கிறிஸ்தவரின் அடையாளமாக உள்ளது. அது தன்னம்பிக்கையல்ல, ஆனால் நமது கலாச்சாரத்தின் மதிப்பீடுகளைப் பிரதிபலித்தலில் இருந்து நம்மை விடுவிக்கும் மகிமையை தாம் கண்டிருக்கிறோம் என்ற அறிவாக உள்ளது. நாம் தேவனுக்காகத் தைரியமாகப் பேசமுடியும், ஏனெனில் “[நம்முடைய] தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது” (3:5).